1981 மார்ச் 24]

(இ) இவர்களில் 15—6—1980 நாளன்றுள்ளபடி, (i) நியமனம் பெற்றவர்கள், (ii) நியமனம் பெறாமல் இருப்பவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களை, நேரடித் தேர்வின் மூலம் நிரப்புவதற்கு 1978 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விண்ணப்பங்கள் ஏதும் கோரவில்லையாதலால் இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : 1976 ஆம் ஆண்டில் எத்தனை பேர் என்றுதான் எழுதியிருந்ததாக எனக்கு நினைவு. ஒருவேளை தவறாக 1978 ஆம் ஆண்டு என்று எழுதிவிட்டேனோ என்னவோ தெரியவில்லை. ஆகவே 1976 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப் பட்ட பட்டியலில் உள்ளவர்கள் பற்றிய தகவல் மாண்புமிகு அமைச்சரிடத்திலே இருந்தால் தெரிவிக்கலாம். இதுதான் அந்தக் கேள்வியின் நோக்கம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுப் பள்ளியில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடங்களை தேர்வாணைக் குழுவின் மூலமாக நிரப்ப கடைசியாக 1975-76 ஆம் ஆண்டு நியமனத் தேர்வு நடத்தப்பட்டது. இதில் 342 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள்.

*156 வினா.—**திரு. த. சந்தோஷம் மற்றும் திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் விடுமுறைகளிலும் பணியாற்ற வேண்டிய பணியாளர்களாகக் கருதும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) இப்பொருள் பற்றிய கருத்துரு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : பல்லாண்டுகளாகவே இந்தக் கோரிக்கை தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களிடம் இருந்து வருகிறது. இது குறித்து விரைவாக ஒரு ஆணை பிறப்பித்து அவர்களுக்கு இந்த நன்மையை வழங்க அரசு முன்வருமா ?

[1981 மார்ச் 24

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பரிசீலனையை விரைவுபடுத்தி உத்தரவிட அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உயர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் விடுமுறைகளிலும் பணியாற்ற வேண்டிய பணியாளர்களாகக் கருத அரசு விரைவிலே முடிவு எடுக்க நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதே நிலை தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும் உண்டு. கோடை விடுமுறை என்பது ஆசிரியர்களுக்கு அல்ல, மாணவர்களுக்குத்தான் என்று கூறி ஆசிரியர்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் இந்தச் சலுகையை வழங்கும் முறையில் அவர்களுடைய கோரிக்கையையும் சேர்த்துப் பரிசீலிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியாகக் கேள்வி போட்டால், கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : உயர் நிலைப் பள்ளிகள் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் விடுமுறைகளிலும் பணியாற்ற வேண்டிய பணியாளர்களாகக் கருதும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பள்ளிக்கூடங்கள் இப்போது " "Vacation department" -ஆகக் கருதப்படுகின்றன. இதை "Non-vacation department" -ஆகக் கருத வேண்டும் என்று பொதுவாக ஒரு கோரிக்கை இருக்கிறது. நாற்பது நாள் கோடை விடுமுறை நாட்களில், 10 நாட்கள் விடை திருத்தும் பணிக்காகவும், 15 நாட்கள் அட்மிஷன் பணிக்காகவும், ஒரு வாரம் மாணவர் தேர்ச்சிப் பணிக்காகவும் ஆசிரியர்கள் வர வேண்டியிருப்பதால், இந்த அம்சங்களை உள்ளடக்கிப் பரிசீலனை செய்து அனைத்து ஆசிரியர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும் இந்தச் சலுகையை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருடைய துணைக் கேள்வி மூலக் கேள்வியை விட நீண்டு போகிறதே.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் கேட்ட அதே கேள்வியை வேறு வகையிலே இவர் கேட்கிறார். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் நல்லது.

1981 மார்ச் 24]

திரு. பா. ரா. தாமஸ் : தலைமை ஆசிரியர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் விடுமுறைகளிலும் பணியாற்ற வேண்டிய பணியாளர் களாகக் கருதுவது குறித்த முடிவு விரைவிலே எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே சமயத்தில் பணியாற்றக் கூடிய ஆசிரியப் பெருமக்கள் கோடை விடுமுறையை அனுபவிக்காத காரணத்தால், அதற்குரிய ஈட்டிய விடுப்பை (Proportionate earned leave) அவர்கள் பெற அதையும் சேர்த்துப் பரிசீலித்து ஆணை பிறப்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ம. சங்கரலிங்கம் : உயர் நிலைப் பள்ளிகள் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் விடுமுறைகளிலும் பணியாற்ற வேண்டிய பணியாளர்களாகக் கருதும் செயற் குறிப்பு பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அத்தோடு கல்லூரியில் உள்ள முதல்வர்களையும், அலுவலகப் பணியாளர் களையும் இணைத்து பரிசீலனை செய்யப்படுமா? ஏனென்றால் இப்போது கல்லூரிகளிலே உள்ள அலுவலகப் பணியாளர்களுக்கு மாத்திரம் விடுமுறைக் காலங்களில் 15 நாட்கள் தொடர்ந்து முறைப்பணி (ரொட்டேஷன் டியூட்டி) போட வேண்டும் என்ற விதியை பல்கலைக் கழகம் வைத்திருக்கிறது. ஒரு கல்லூரியில் அலுவலகப் பணியில் எழு பேர் இருக்கிறார்கள் என்றால், மூன்று பேரை 15 நாட்களுக்குப் பணிபுரிய வேண்டும் என்று சொல்லிவிட்டு, மற்றவர் களுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. பிறகு மீதமுள்ளவர்கள் வந்து 15 நாட்களுக்குப் பணிபுரிகிறார்கள், மற்றவர்கள் விடுமுறையில் இருக்கிறார்கள். ஆகவே இந்த முறையை மாற்றி, இத்தோடு இணைத்து, பரிசீலனை செய்ய அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதற்கும் தனிக் கேள்வி போட்டால் நல்லது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த மாதிரி உறுதியாக இருந்தால், என் மேல் யாருக்கும் சந்தேகம் வராது.